# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.32 /2015**

திருமதி. S. விசாலாட்சி,
க/பெ V.S. சந்தானம், Msc., M.Phil.,
வெள்ளையனிருப்பு தெரு,
பூம்புகார்,
நாகப்பட்டிணம் மாவட்டம். ........மேல் முறையீட்டாளர்
(திருமதி. S. விசாலாட்சி)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.73C, துர்காலயா தெரு,
திருவாரூர் – 610 001. ......... எதிர்மனுதாரர்
(திரு. S.சதீஸ்குமார், செயற்பொறியாளர் /திருவாரூர் )

**கேட்புரை நாள்: 9–6–2015**

**ஆணை நாள் : 25–9–2015**

1. திருமதி. S. விசாலாட்சி, க/பெ V.S. சந்தானம், M.Sc., M.Phil., பூம்புகார், நாகப்பட்டிணம் அவர்களின் 23.3.2015 நாளிடப்பட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.32/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 9.6.2015 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் எதிர்மனுதாரரின்

எழுத்துபூர்வமான வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>

மேல்முறையீட்டாளர் நன்செய் சர்வே எண்.புல எண்.41/1Aல் அவருக்கு தெரியாமல் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. <u>வழக்கின் சுருக்கம்</u>

2.1 மேல்முறையீட்டாளர் தனக்கு உரிமையான SF No.41/1Aஇன் நிலத்தை திரு. செந்தில் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார். மேற்கண்ட நிலம் அவருக்கு அவருடைய தகப்பனாரால் 1967இல் செட்டில்மெண்ட் செய்யப்பட்ட நிலமாகும்.

2.2 மேற்கண்ட நிலத்தில் வழங்கப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு அவருக்கு தெரியாமல் அந்த நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்த மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2.3 திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தின் குறைதீர்க்கும் மன்றத்தில் அவருடைய முறையீடு நிராகரிக்கப்பட்டதால் தன்னுடைய இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரர் முன்பு சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

3.1 அவரது தந்தை காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை அவர்களால் திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா ஓகை கிராமத்தில் நஞ்சை புஞ்சை வீடு அவரது பெயருக்கு 1967ம் வருடம் செட்டில்மெண்ட் மூலம் அளித்துள்ளார்கள்.

3.2 அவரது நஞ்சை நிலத்தில் அவருக்கு தெரியாமல் மின்இணைப்பு வழங்கப்பட்டு இயங்கி வருகிறது.

3.3 கடந்த 11.2.2014 அன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் குடவாசல் மின் வாரியத்திற்கு விபரம் கேட்டு மிக காலதாமதம் செய்துமேற்பார்வை பொறியாளர் மூலம் 30.8.2014 தகவல் கிடைக்கப்பெற்று அதன்பின் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு

மேல்முறையீடு செய்து மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மூலம் விசாரிக்கப்பட்டு வழக்கினை 21.2.2015 அன்று முடித்து அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

3.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் குடவாசல் மின் வாரியத்திற்கு சாதகமாக செயல்பட்டுள்ளது. குடவாசல் இளமின் பொறியாளர் களப்பணி செய்து சரியான தகவல் கொடுத்துள்ளார் என்றும் மேற்பார்வை பொறியாளர் தெரிவித்ததோடு எந்த ஆவணமும் அவரிடம் காண்பிக்கவில்லை.

3.5 உண்மையிலேயே இளமின் பொறியாளர் கொடுத்த தகவல் அனைத்தும் சரியில்லாத மேம்போக்கானது, அவரது நஞ்சை நிலத்தில் புல எண்.41/1Aஇல் உள்ள மின் இணைப்பு எண்.567–003–15 என்றும் மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் 1976 வருடம் என்பது தவறான தகவல்.

3.6 அவரது நஞ்சை நிலத்தில் உள்ள மின் இணைப்பு எண். 567–003–23 மின் இணைப்பு பெற்ற நாள் 26.7.2002 திரு. எஸ். மணி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

3.7 அவர் வெளியூரில் வசித்து வந்ததால் மின் இணைப்பு அவரது இடத்தில் அவர் அனுமதியின்றி மணி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நஞ்சை நிலத்தை அவர் செந்தில் என்பவருக்கு கிரயம் செய்துவிட்டார். இதில் மின் இணைப்பு இருந்ததை மறைத்து கிரயம் செய்து வாங்கிவிட்டார். அதனால் அவருக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கிரயம் செய்தபோது அதில் ஆழ்குழாய் கிணறு ஆயில் இஞ்சினுடன் அவரது தந்தை வைத்திருந்தது போல் நினைத்து நிலத்தின் சென்று பார்வையிடாமல் கிரயம் செய்து விட்டார். மின் இணைப்புடன கூடிய ஆழ்குழாய் கிணறு சம்பந்தமான தளவாட சாமான்களுக்கோ கட்டிடத்திற்கோ எந்த தொகையும் பெற்றக் கொள்ளாததோடு பத்திர பதிவிலும் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 எதிர்மனுதாரரின் சார்பில் செயற்பொறியாளர், இயக்குதலும் பராமரித்தலும், திருவாரூர் அவர்கள் கீழ்கண்ட வாதங்களை தன்னுடைய 18.4.2015 நாளிட்ட பதிலுரையில் தெரிவித்துள்ளார்.

4.2 மனுதாரர் திருமதி. S. விசாலாட்சி B.A., அவர்கள் கடந்த 15.2.2015 அன்று அரசூர் கிராமத்தில் புல எண்.41–1A தனக்கு சொந்தம் என்றும் அதில் அனுமதியின்றி விவசாய மின் இணைப்ப வழங்கியுள்ளதாகவும் புல எண்னை மட்டும் குறிப்பிட்டு மின் நுகர்வோர் பெயர் மின்இணைப்பு எண். மின் இணைப்பு பெற்ற நாள் ஆகியவற்றை தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் கோரியிருந்தார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு எண்ணின் அடிப்படையிலேயே ஆவணங்கள் பராமரிக்கப்படுவதால் மின் இணைப்பு எண் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

4.3 இவ்வலுவலகத்தில் இருந்து 13.3.2014ல் அனுப்பப்பட்ட தகவல் கிடைக்கப்பெறவில்லை என்றும் தனது நிலத்தில் உள்ள மின் இணைப்பு எண். தனக்கு தெரியவில்லை என்றும் மேல்முறையீடு செய்திருந்தார். மின்னிணைப்பு எண்.567–003–15 வழங்கப்பட்ட விபரம் பதிவேட்டின்படி கடந்த 25.8.1976ஆம் ஆண்டிலும் மின் நுகர்வோர் பெயர் கணினி பதிவேற்றத்தின் படியும் பதிவேட்டின் படியும் திரு. சண்முகம் பிள்ளை என்பவர் பெயரில் உள்ளது என்ற தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

4.4 மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் திருவாரூர் வட்டத்தில் நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புல எண்.41/1Aல் உள்ள விவசாய மின் இணைப்பை துண்டிப்பு செய்யக்கோரி பதிவு செய்யப்பட்ட புகார் (மனு எண்.023 பதிவு செய்யப்பட்ட நாள் 26.9.2014) கடந்த 5.2.2015 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு புல எண்.41/1Aல் உள்ள விவசாய மின்இணைப்பு எண்.567–003–15 திரு. சண்முகம்பிள்ளை என்பவரது பெயரில் உள்ளதாலும் வருவாய் ஆவணங்களின்படி புல எண்.41–1Aல் உள்ள விவசாய மின் இணைப்பு எண்.567–003–15 திரு. மு. செந்தில், த/பெ முத்துபிள்ளை என்பவர்

பெயரில் உள்ளதாலும் மனுதாரரால் உரிமைக்கான ஆவணங்கள் ஏதும் அளிக்க இயலாததாலும் மனுதாரரது கோரிக்கை ஏற்றுக் கொள்ள இயலாது என்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

4.5 அரசூர் கிராமம் புல எண்.41–1Aல் உள்ள விவசாய மின் இணைப்பு எண்.567–003–15 என நிலத்தின் உரிமையாளரிடமும் களஆய்விலும் உறுதி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு மின் குறைதீர்ப்பாளர் சென்னை அவர்களிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

4.6 மின் குறைதீர்ப்பாளர் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்ட மனுதாரர் கடிதத்தில் புல எண்.41–1Aல் உள்ள மின் இணைப்பு எண்.567–003–15 இல்லை என்றும் மின் இணைப்பு எண்.567–003–23 என்ற மின்இணைப்புதான் மேற்கண்ட புல எண்ணில் உள்ளதாகவும் மின்நுகர்வோர் திரு. மணி என்றும் இதுவரை அளித்துள்ள மனுக்களுக்கு முரணாக குறிப்பிட்டுள்ளார்.

4.7 மேலும் மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளதாவது தனது நிலத்தினை தான் நேரில் சென்று பராமல் கிரயம் செய்து கொடுத்துவிட்தாகவும் அதில் ஆழ்குழாய் கிணறு ஆயில் எஞ்சின் இருந்ததை மறைத்து திரு. மு. செந்தில் என்பவர் தன்னிடம்கிரயம் பெற்றுள்ளதாகவும் கிணறு சம்மந்தமான தளவாட சாமான்களுக்கும் கட்டிடத்திற்கு எந்த தொகையும் பெறவில்லை என்பதால் தான் அந்த தொகையை பெறுவதற்கு மின் இணைப்பை (முதலில் மின் துண்டிப்பு செய்ய கோரிய இணைப்பு எண்.567–003–15 தற்போது மின் துண்டிப்பு செய்ய கோரும் மின் இணைப்பு எண்.567.003–23) துண்டிப்பு செய்யுமாறும் தெரிவித்துள்ளார்.

4.8 தற்போது மனுதாரர் தெரிவித்துள்ள மின் இணைப்பு எண்.567–003–23 என்றும் மின் இணைப்பு மின்நுகர்வோர் திரு. மணி அவர்களது பெயரில் உள்ளது என்றும், மின் இணைப்பு வழங்கப்பட்ட புல எண்.46/3ல் என்றும்கடந்த 24–07–1987 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தயார் நிலை பதிவுவேட்டின் மூலமாகவும் கணினி பதிவேற்றத்தின் அடிப்படையிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

4.9 மனுதாரர் தனது நிலத்தினை (புல எண்.41–1A) கடந்த 2011ம் ஆண்டு ஆவண எண்.666/2011படி திரு . மு. செந்தில் என்பவருக்கு கிரயம் செய்துள்ளார். ஆனால், அரசூர் கிராமத்தில் புல எண்.41–1Aல் உள்ள விவசாய மின் இணைப்பு 567–003–15 திரு. சண்முகபிள்ளை என்பவரது பெயரில் கடந்த நாள் 5.8.1976 இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசூர் கிராமத்தில் புல எண்.46/3ல் உள்ள விவசாய மின் இணைப்பு எண்.567–003–23 திரு. ச. மணி என்பவரது பெயரில் கடந்த 24.7.1987 இருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட இருபுல எண்களில் உள்ள மின் இணைப்புகளில் இதுவரை பெயர்மாற்றம் ஏதும் செய்யப்படாதது உறுதி செய்யப்பட்டுள்ளது.

4.10 எனவே, மனுதாரர் அரசூர் கிராமத்தில் தனது நிலத்தினை (புல எண்.41–1A) திரு. செந்திலுக்கு கிணற்றிற்கான தளவாட சாமான்களுக்கான தொகையையும் கட்டிடத்திற்கான தொகையையும் பெறுவதற்காகவே இந்த புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தனிப்பட்ட முன்விரோதம் காரணமாக மின் துண்டிப்பு செய்யக்கோரி இப்புகார் அளித்துள்ளதாகவும் இப்புகாருக்கு வாரியம் எந்த விதத்திலும் பொருப்பாகாது என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## 5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 9.6.2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திருமதி. S. விசாலாட்சி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S.சத்தீஸ்குமார், செயற்பொறியாளர்/திருவாரூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட 41/1A என்ற சர்வே எண்.ணில் தான் விவசாய மின் இணைப்பு எதுவும் பெறவில்லை என்றும் 1967ம் ஆண்டு மேற்கண்ட நிலம் அவரின் பெயருக்கு செட்டில்மெண்ட் பண்ணப்பட்டுவிட்டது என்றும் எனவே 5.8.1976ல் தன்னுடைய தகப்பனார் பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது தவறு என்று வாதிட்டார்.

6.3 மேற்கண்ட நிலத்தில் 2001வரை ஆயில் எஞ்சின் வைத்துதான் விவசாயம் செய்யப்பட்டது என்ற தகவலையும் தெரிவித்தார்.

6.4 மின்சார வாரியத்தின் இணையதளத்தில் விவசாய மின் இணைப்பு எண்.23 மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் 26.7.2002 என்று குறிப்பிட்டுள்ளதால் அதுதான் மேற்படி நிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள மின்இணைப்பு என்று மனுவில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். ஆனால், இணையதளத்தில் சர்வே எண். தெரிவிக்கப்படவில்லை என்பதால் அனுமானத்தின் பேரில்தான் தான் அவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளதாக வாதிட்டார்.

6.5 அவருடைய நிலத்தில் அவருக்கு தெரியாமல் அவரின் விண்ணப்பமில்லாமல் அவருக்கு நிலத்தின் உரிமை உள்ள காலத்தில் மின் இணைப்பு வழங்கியிருந்தால் அது தவறான மின் இணைப்பு என்று ஆகிவிடுகிறது. எனவே, அதை மின் துண்டிப்பு செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் அவரின் மனுவில் தெரிவித்துள்ள விவசாய மின் இணைப்பு எண்.15 மேல்முறையீட்டாளரின் தகப்பனார் திரு. சண்முகம் பிள்ளை என்ற பெயரில் 5.8.76 அன்று வழங்கப்பட்டுள்ளது.

7.2 மேலும், மின் இணைப்பு எண்.23, திரு. மணி அவர்களது பெயரில் 24.7.87 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தயார் நிலையை 11.5.1987ல் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த தயார்நிலை பதிவேட்டில் சர்வே எண்.46/3 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும்

எனவே, மேல்முறையீட்டாளர் 41/1Aல் உள்ள மின்இணைப்பு எண்23 என்று தெரிவிப்பது தவறான தகவல் என்று வாதிட்டார்.

7.3 விவசாய மின் இணைப்புகளின் தகவல்களை கணினியில் பதியும்பொழுது மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் தவறாக குறிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

7.4 மேற்கண்ட 41/1A என்று சர்வே எண்ணிற்கு தற்பொழுது மேல்முறையீட்டாளர் உரிமையாளர் அல்ல மற்றும் மின்இணைப்பு எண்.15ம் அவர் பெயரில் இல்லை எனவே, அந்த சர்வே எண்ணிலுள்ள விவசாய மின் இணைப்பை துண்டிக்க கோருவதற்கு அவருக்கு உரிமையில்லை என்றும் வாதிட்டார்.

7.5 தங்களிடம் கிடைத்துள்ள ஆவணங்களில் விவசாய மின் இணைப்பு எண்.15 எந்த சர்வே எண்ணில் கொடுக்கப்பட்டுள்ளது என்ற தகவல் இல்லை என்றும் மின் இணைப்பு 5.8.76ல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் சுமார் 39 வருடங்களுக்கு முந்தைய ஆவணம் என்பதால் மேலும் அவகாசம் கொடுத்தால் வேறு ஆவணங்கள் தேடி தகவல் கிடைத்தால் தரமுடியும் என்றும் தெரிவித்தார்.

8. <u>எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதுரை</u>

8.1 இதன் தொடர்பாக தற்போதைய உரிமையாளர் திரு. செந்தில் குடவாசல் அவர்களுக்கு புல எண்.41/1Aல் உள்ள மின் இணைப்பு தொடர்பான உரிய ஆவணங்களை அளிக்க வேண்டி தெரிவிக்கப்பட்டது. ஆனால், அரசூர் புல எண்.41/1Aல் உள்ள மின் இணைப்பு தொடர்பான ஆவணங்களை இதுநாள் வரை திரு.செந்தில் அவர்கள் இவ்வலுவலகத்தில் அளிக்கவில்லை. மாறாக அவரது நஞ்சை நிலத்தில் அவர் தாத்தா எம். சண்முகம் பெயரில் உள்ள மின் இணைப்பை துண்டிக்கக்கூடாது என உத்தரவிடவேண்டும் என தெரிவித்து குறைதீர் மன்றம் திருவாரூர் அவர்களிடம் 22.6.2015 நாளிட்ட புகார் மனு அளித்துள்ளார்.

8.2 மேலும், வருவாய் பிரிவு திருவாரூர் மற்றும் குடவாசல் பிரிவு அலுவலகத்தில் அரசூர் புல எண்.41/1Aல் உள்ள மின் இணைப்பு தொடர்பான எவ்வித ஆவணங்களும் கிடைக்கப் பெறவில்லை. மாறாக இளமின் பொறியாளர்/குடவாசல் பிரிவு அலவலக ஆவணத்தில்

அரசூர்–I மின்மாற்றியில் நபார்டு திட்டத்தின் மூலம் புதிய மின்மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டின் வரைபடத்தில் மேற்கண்ட புல எண்.41/1Aல் எவ்வித விவசாய மின் இணைப்பும் காட்டப்படவில்லை என்பதும் விவசாய மின் இணைப்பு தயார்நிலை பதிவேட்டிலும் 2003 வருடத்திலிருந்து மேற்கண்ட புல எண்ணில் விவசாய மின் இணைப்புக்கு பதிவு செய்யப்படவில்லை என்பதுவும் தெரிய வருகிறது.

8.3 இளநிலை பொறியாளர்/குடவாசல் பிரிவு அலுவலர் அவர்களின் கடிதத்தின்படி திரு. எம். செந்தில், த/பெ முத்துப்பிள்ளை அகர ஓகை குடவாசல் என்பவருக்கு சொந்தமான அரசூர் புல எண்.41/1Aல் உள்ள மின் இணைப்பு சட்டபூர்வமில்லாத வகையில் (unauthorised service) பயன்படுத்தி வருவதாக தெரிய வருகிறது.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சர்வே எண்.41/1Aல் அவருக்கு தெரியாமல் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பை துண்டிக்க வேண்டும் என்பது ஆகும்.

9.2 மேற்கண்ட நிலம் மேல்முறையீட்டாளரின் பெயரில் 1967ம் ஆண்டு அவருக்கு செட்டில்மெண்ட் பண்ணப்பட்டுவிட்டது. எனவே, 5.8.1976ல் அவரின் தந்தையார் பெயருக்கு அந்த இடத்தில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது தவறு என்று வாதிட்டுள்ளார். மேலும் 2001ம் ஆண்டுவரை ஆயில் இஞ்சின் வைத்துதான் விவசாயம் செய்யப்பட்டுவந்தது என்ற தகவலையும் தெரிவித்தார்.

9.3 அவர் மேற்கண்ட சர்வே எண்ணிலுள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு எதுவும் விண்ணப்பித்து பெறவில்லை என்பதால் அங்கு அவரின் உரிமை உள்ள காலத்தில் அவருக்கு தெரியாமல் ஏதேனும் மின்இணைப்பு வழங்கப்பட்டுஇருந்தால் அது தவறான தகவலின்படி பெறப்பட்ட மின் இணைப்பு ஆகிவிடும். எனவே, அதை மின் துண்டிப்பு செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

9.4 மேற்கண்ட நிலத்தில் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.567–003–15 அல்ல, 567–003–23 என்றும் வழங்கப்பட்ட நாள் 26.7.2002 என்றும் வாதிட்டுள்ளார்.

9.5 எதிர்மனுதாரர் மின் இணைப்பு எண்.567–003–23 என்பது திரு.மணி அவர்களின் பெயரில் சர்வே எண். 46/3 என்ற நிலத்திலுள்ள கிணற்றிற்கு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்து அதற்கு ஆதாரமாக தயார்நிலை பதிவேட்டின் சம்மந்தப்பட்ட பக்கத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார். மேலும், அந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்ட நாள் 24.7.87 என்று தெரிவித்துள்ளார். அந்த தயார்நிலை பதிவு ஏட்டின் பக்கம் 12இன்படி புல எண்.46/3ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு பெறுவதற்காக 11.5.87 அன்று தயார்நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதுவும், அதிலுள்ள பதிவுகளின்படி மின்இணைப்பு எண்.23 என்பதுவும், கொடுத்த நாள் 24.7.87 என்றும் அறியமுடிகிறது. எனவே, மின் இணைப்பு எண்.567–003–23, கொடுக்கப்பட்டுள்ள புல எண்.46/3 என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளது போல் புல எண்.41/1Aஇல் அம்மின் இணைப்பு இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.6 மின்இணைப்பு எண்.567–003–15ஐ பொறுத்தவரையில் அது 8.12.76ல் கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு என்பதற்கு ஆதாரமாக காப்புதொகை (security deposit) பதிவேட்டின் தகவல் பதிவாகியுள்ள பக்கத்தின் நகலை சமர்ப்பித்துள்ளார். அதில் சர்வே எண் பற்றி பற்றிய தகவல்கள் இல்லை.

9.7 மேலும், புல எண்.41/1Aல் மின்இணைப்பு சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், அரசூர்–I மின்மாற்றியில் நபார்டு திட்டத்தின் கீழ் புதிய மின் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளருக்கு 31.3.2004ல் சமர்ப்பித்த மதிப்பீட்டின் வரைபடத்தில் புல எண்.41/1Aல் எவ்வித மின்இணைப்பும் காண்பிக்கப்படவில்லை என்றும் 2003 வருடத்திலிருந்து தயார்நிலை பதிவேட்டிலும் மேற்கண்ட புல எண்.41/1Aல் விவசாய மின்இணைப்பிற்கு பதிவு எதுவும் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்து எனவே திரு. எம். செந்தில், த/பெ முத்துப்பிள்ளை அகர ஓகை குடவாசல் என்பவருக்கு சொந்தமான அரசூர் புல எண்.41/1Aல் உள்ள மின்இணைப்பு சட்டபூர்வமற்றது (unauthorised) என்று தெரிவித்துள்ளார்.

9.8 மேலும், திரு. எம். செந்தில் அவர்களுக்கு அரசூர் புல எண்.41/1Aல் உள்ள விவசாய மின் இணைப்பு சம்பந்தமான ஆவணங்களை அளிக்க கோரியும் அவர் இதுநாள் வரை அந்த ஆவணங்களை அளிக்கவில்லை என்றும் அவர் இதுசம்பந்தமாக திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார் என்றும், அந்த 26.6.2015 நாளிட்ட மனுவும் மன்றத்தின் ஆணையின்படி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிகிறது. மேலும், மேற்கண்ட மன்றத்தின் ஆணையின் மீது மேல்முறையீடு எதுவும் மின்குறைதீர்ப்பாளரிடம் திரு. செந்தில் அவர்கள் இது நாள்வரை சமர்ப்பிக்கப்படவில்லை.

9.9 இதில் எதிர்மனுதாரரே மேற்கண்ட சர்வே எண்.41/1Aல் உள்ள விவசாய மின்இணைப்பு unauthorised service என்று கூறுவதினால், மேல்முறையீட்டாளருக்கும், எதிர்மனுதாரருக்கும் கருத்து வேற்றுமை இல்லை என்று தெரிகிறது.

9.10 எதிர்மனுதாரர், தன்னுடைய 18.4.2015 நாளிட்ட பதிலுரையில் புல எண்.41/1Aல் உள்ள விவசாய மின் இணைப்பு எண்.567–003–15 என்றும் அந்த மின்இணைப்பு 5.8.1976ம் ஆண்டு சண்முகம் பிள்ளை பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆனால், தன்னுடைய 14.8.2015 நாளிட்ட எழுத்துபூர்வமான வாதுரையில் இளநிலை பொறியாளர்/இயக்குதலும் & பராமரித்தலும்/குடவாசல் பிரிவு அவர்களின் கடிதத்தின்படி அரசூர் புல எண்.41/1Aல் உள்ள மின் இணைப்பு சட்டபூர்வமில்லாத வகையில் (unauthorised service) ஆக பயன்படுத்தி வருவதாக தெரியவருகிறது என்று கூறியுள்ளார். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. எனவே, எதிர்மனுதாரர் அரசூர் புல எண்.41/1Aல் உள்ள விவசாய மின்இணைப்பு சட்டபூர்வமானதுதானா இல்லையா என்பதை ஆராய்ந்து அது சட்டபூர்வமில்லாத வகையில் (unauthorised) இயங்குகிறது என்பதை உறுதி செய்துகொண்டு ஒரு unauthorised service விவசாய மின்இணைப்பின் மீது எடுக்கவேண்டிய சட்டப்படியான நடவடிக்கையை தற்பொழுதுள்ள விதிகளின்படி எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. <u>Observation</u>** :

விவசாய மின் இணைப்பு எண்.567–003–15 எந்த புல எண்ணில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதுவும் புல எண்.41/1Aல் தற்பொழுது உபயோகித்திலுள்ள விவசாய மின் இணைப்பின் எண். என்ன என்பதுவும் மின் இணைப்பை வழங்கிய உரிமம்தாரருக்கு தெரியவில்லை என்பது உரிமம்தாரர் அவரால் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்புகளுக்கான ஆவணங்களை சரியாக பராமரிக்கவில்லை என்பதை உறுதிபடுத்துகிறது. எனவே, மேற்பார்வை பொறியாளர்/திருவாரூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய அலுவலர்களுக்கு விவசாய மின் இணைப்புகளின் உரிய ஆவணங்களை தகுந்த முறையில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய அறிவுரைகளை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**11. <u>முடிவுரை</u>**

**11.1** சர்வே எண்.41/1Aல் உள்ள விவசாய மின்இணைப்பு சட்டபூர்வமானதுதானா இல்லையா என்பதை எதிர்மனுதாரர் ஆராய்ந்து அது சட்டபூர்வமில்லாத வகையில் (unauthorised service) வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை உறுதி செய்து கொண்டு ஒரு unauthorised விவசாய மின் இணைப்பின் மீது எடுக்கவேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகளை தற்பொழுதுள்ள விதிகளின்படி எதிர்மனுதாரர் எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.32/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி. S. விசாலாட்சி,
க/பெ V.S. சந்தானம், Msc., M.Phil.,
வெள்ளையனிருப்பு தெரு,
பூம்புகார்,
நாகப்பட்டிணம் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.73C, துர்காலயா தெரு,
திருவாரூர் – 610 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருவாரூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.73C, துர்காலயா தெரு,
திருவாரூர் – 610 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.